பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 07 திங்கட்கிழமை 23.09.2024 கதிர் 320

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து தெளிவான முடிவு வெளிவருவதற்கு முன்னரே பொதுக் கட்டமைப்பில் தொடர்ந்தும்சேர்ந்தியங்கப்போவதாக ரெலோவின் நாடாளுமன்ற ☞2

# புதிய ஜனாதிபதியாக இன்று பதவியேற்கிறார் அநுரகுமார

## ஜனாதிபதி செயலகத்தில் எளிமையான நிகழ்வு



**2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அநுரகுமாரதிஸநாயக்கஅதிகவாக்குகளைப் பெற்று, இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாகத்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் எளிமையான நிகழ்வில் அவர் தனது கடமைகள் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளார்.**

**ஜனாதிபதித் தேர்தலின் முதல் சுற்று வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் வாக்காளர் எவரும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறாத** ☞2

## தமிழ் அரசுக் கட்சி முடிவு சரியானது என்பதை மக்கள் நிரூபித்துவிட்டனர்

### சுமந்திரன் எம்.பி. பெருமிதம்: தமிழர்களுக்கு நன்றியும் தெரிவிப்பு

2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக்கட்சிஎடுத்ததீர்மானம்மிகச்சரியானது என்பதை தமிழ் மக்கள் தமது வாக்குகளின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார் அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ளதேர்தல்மாவட்டங்கள்நிர்வாக மாவட்டங்கள் அனைத்திலும் ☞9



## இந்தியத் தூதுவர் நேரில் அநுரவுக்கு வாழ்த்துக்கள்

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளஅநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்த இந்திய உயர்ஸ் தானிகர் சந்தோஷ் ஜா, இந்தியத்தலைமைத்துவத்தின் நல்வாழ்த்துகளைத் தெரிவித் ததுடன், மக்களின் ஆணையினை வென் றமைக்காகபாராட்டுகளையும் தெரிவித்திருந்தார். பலநாகரிக ஒற்றுமைகளைகொண்டுள்ள இரட்டையராகவும் நமது இரு நாடுகளினதும் ☞9

## விருப்பு வாக்கு எண்ணிக்கை தொடர்பில் ஐ.ம.ச. குற்றச்சாட்டு

2024 ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது விருப்பு வாக்கு ☞8

## அமெரிக்கா வாழ்த்து

ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றிக்காக அமெரிக்கா அனுரகுமாரதிசநாயக்கவிற்கு ☞8

## "தேவைப்படும்போது ஆதரவு" அநுரவுக்கு சஜித் உறுதியளிப்பு

புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு தேவைப்படும்போது தேவையான ஆதரவை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும் என்று ஜனாதிபதி ☞8

## இன, மதத்தைத் தூண்டாமல் பெற்ற வெற்றிக்கு வாழ்த்து

### அனுரவிற்கு சுமந்திரன் நன்றி பாராட்டு



இனமதபேதத்தைதூண்டாமல் பெற்ற வெற்றிக்காக தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமாரதிசநாயக்கவிற்கு நன்றி என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளார் .

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இன, மத வெறிகளைத் தூண்டாமல் சிறப்பாக வெற்றி பெற்ற அனுரவிற்கு எமது வாழ்த்துக்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆலோசனையை ஏற்று, மற்றைய வேட்பாளர்களை நிராகரித்து சஜித் துக்குவாக்களித்துதேர்தல் வரைபடத்தில் ஒரு வித்தியாசத்தைக் காண்பித்த வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் எமது நன்றிகள். – என்றுள்ளது. (05)

## அநுரவுக்கு சிறீதரன் வாழ்த்து

புதிய அரசுத் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவின் 9ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள அனுரகுமார திஸாநாயக்க அவர்களுக்குஎனதுவாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தநாட்டின்அரசஇயந்திரத்தின் கொள்கை வகுப்பிலும், செயற்றிறனிலும் மாற்றத்தை எதிர்பார்த்து தங்களுக்கு ஆணை வழங்கியதென்னிலங்கைமக்களைப் போலவே, கடந்தஎழுபதுஆண்டுகால ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்து விடுபட்டு இறைமையுள்ள இனமாக வாழ்வதற்கான ☞8

## 15 தேர்தல் மாவட்டங்களில் அநுரகுமார முழு வெற்றி

2024 ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின்முதல்சுற்று எண்ணிக்கையின் முடிவில் 22 தேர்தல்மாவட்டங்களில்15 மாவட்டங்களில் அனுரகுமார திஸாநாயக்கவெற்றிபெற்றார்.

அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், கம்பஹா, கேகாலை, கண்டி, மாத்தளை, கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பத் தோட்டை மற்றும் மொனராகலைஆகியமாவட்டங்களில் திஸாநாயக்க முதலிடத்தைப் பெற்றுள்ளார். ☞8

## தீர்க்கப்படாத முரண்பாடுகளை நிவர்த்திப்பதற்கான புதிய ஒளி

### அநுரவை வாழ்த்தி மு.கா. தலைவர் ஹக்கீம் கருத்து

இலங்கையில் இதுகாறும் தீர்க்கப்படாத முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒளி இப்போது புதிய அணியினர் ஊடாகப் பாய்ச்சப்படுகின்றது என்று புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை வாழ்த்தியுள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது: தேர்தலில் இலங்கை மக்கள் தமது ☞9

## வரலாற்றில் எனக்கு உரிய இடம் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும்

### பதவி விலகும் ஜனாதிபதி ரணில் உருக்கம்

வரலாற்றில் எனக்கு உரித்தான இடம் இன்று அல்லாமல் எதிர்காலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதை நான் அறிவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசேட ஊடக அறிவிப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முழு உரையும் வருமாறு,

செப்டம்பர் 21 இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தீர்மானமொன்றை வழங்கியுள்ளனர். நாம் அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசின் நல்லிருப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வங்குரோத்து அடைந்து, பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையாக வீழ்ச்சிடைந்திருந்த, மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன்.

அந்த சவாலுக்கு முகங்கொடுக்கின்ற அளவிலான ஆத்ம சக்தி பெரும்பாலானோருக்கு இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேயேநான்அந்தப்பொறுப்பினை ☞2

## அனுரகுமார திசநாயக்கவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை மதிக்கின்றேன்

### அலி சப்ரி தெரிவிப்பு



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்கவிற்குமக்கள்வழங்கியுள்ள ஆணையை முழுமையாக மதிக்கின்றேன் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரிதெரிவித்துள்ளார்.

அவர் தனது சமூக ☞8

காலைக்கதிர் Kalaikkathir

# அனைவரையும் இணைத்தபடி முன்னோக்கிப் பயணிப்பேன்

## வெற்றியின் பின்னர் அநுர தெரிவிப்பு

நாட்டு மக்கள் எம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வேறுசில அரசியல் கட்சிகளின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அது ஜனநாயகத்தின் சிறந்ததோர் குறியீடாகும். எது எவ்வாறெனினும் என் மீது நம்பிக்கை வைத்த மற்றும் எனக்கு வாக்களிக்காத சகலரையும் இலங்கையர்களாகக் கருதி, எவ்வித மாறுபாடுகளுமின்றி, அனைவரையும் இணைத்துக்கொண்டு முன்னோக்கிப் பயணிப்பேன் என இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் ஞாயிற்றுக்கிழமை (22) கொழும்பிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், அங்கு தேர்தலில் வெற்றியீட்டி ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அதனையடுத்து உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்ததாவது:

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை நடத்தியதே ஒரு பெரும் வெற்றியாகும். மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறாமல் உள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படாமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தின்தீர்ப்பும்வெளியாகியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியமையையே நான் இங்கு அடையப்பட்ட முதலாவது வெற்றியாகக் கருதுகின்றேன். அதேபோன்று மக்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்கக்கூடியவாறான நியாயமான தேர்தலை நடத்துவதை முன்னிறுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கடின முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் நன்றி கூறுகின்றேன்.

அடுத்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியதைப்போன்று நியாயமான தேர்தல்க்ளை நடாத்துவதை முன்னுறுத்தி பல்வேறு பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவற்றை அடுத்தகட்டத்துக்குக் கொண்டுசெல்வது என்னுடைய தனிப்பட்ட பொறுப்பு மாத்திரமன்றி, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகலரதும் பொறுப்புமாகும். எனவே அவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் நான் விசேட அவதானம் செலுத்துவேன்.

தற்போது எமது நாடு சமூக, பொருளாதார, வெளிநாட்டுறவு என பல்வேறு பிரிவுகளிலும் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றது. இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மக்கள் ஆணையின் மூலம் தெரிவுசெய்யப்படும் ஆளும்தரப்பின் ஊடாக மாத்திரமே முன்னெடுக்கமுடியும் என நாம் கருதினோம்.

எந்தவொரு ஆட்சி நிர்வாகத்துக்குமான பலத்தையும், அது பயணிக்கவேண்டிய திசையையும் மக்கள் ஆணையே வழங்குகின்றது. கடந்த காலங்களில் மக்கள் ஆணை பல்வேறு விதங்களில் திரிபுபடுத்தப்பட்டதைப் பார்த்தோம். ஆகவே அந்த மக்கள் ஆணையை நாட்டில் மீளவும் ஸ்தாபிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கமைய முதலில் ஜனாதிபதித்தேர்தலையும், அதனைத்தொடர்ந்து பாராளுமன்றத்தேர்தலையும் நடாத்தவேண்டும் என்ற பொது நிலைப்பாடு உள்ளது.

எமது நாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றைப்போன்று தேர்தல் நடாத்தப்படும் முறையும் மாறவேண்டும். தேர்தல்கள் முடிவடைந்ததன் பின்னர் அதனைக் கொண்டாடுவதும் நிறுத்தப்படவேண்டும். அதற்கேற்றவாறு தேர்தலின் பின்னர் வெடி கொளுத்துதல் போன்ற ஏனையோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என நாம் எமது ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்தியிருந்தோம். அதற்கமைய வன்முறைகளற்ற அமைதியான தேர்தலாக இத்தேர்தல் நடைபெற்றுமுடிந்திருக்கிறது. இந்த நிலை தொடரவேண்டும் எனவும், எந்தவொரு பிரஜையும் வன்முறை செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது எனவும் வலியுறுத்துகின்றோம்.

அடுத்ததாக எமது நாடு பல்வேறு பிரிவினைகளுக்கு முகங்கொடுத்திருந்தது. அதனால் ஏற்பட்ட பின்விளைவுகளையும் அனுபவித்திருந்தது. அப்பிரிவினைகளைக் களையவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். இந்த சவாலை தனிநபராலோ, தனியொரு கட்சியினாலோ அல்லது தனியொரு குழுவினாலோ கையாளமுடியாது. ஆகவே இந்நோக்கத்துக்காக சகலரையும் ஒன்றிணையுமாறு அழைப்புவிடுக்கின்றோம். அதுமாத்திரமன்றி இது குறித்து எதிர்வருங்காலங்களில் கட்டம் கட்டமாகப் பேச்சு நடத்தி முன்நோக்கிப் பயணிப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம்.

நிறைவாக நாட்டு மக்கள் எம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வேறுசில அரசியல் கட்சிகளின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அது ஜனநாயகத்தின் சிறந்ததோர் குறியீடாகும். எது எவ்வாறெனினும் என்மீது நம்பிக்கை வைத்த மற்றும் எனக்கு வாக்களிக்காத சகல பிரஜைகளையும் இலங்கையர்களாகக் கருதி, எவ்வித மாறுபாடுகளுமின்றி, அனைவரையும் இணைத்துக்கொண்டு முன்நோக்கிப் பயணிப்பேன் என்றார்.

## இனி இது .....

உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். பொதுக் கட்டமைப்பினரால் நிறுத்தப்பட்ட வேட்பாளரான அரியநேத்திரன் 2 லட்சத்து 26 ஆயிரத்து 343 வாக்குகளைப் பெற்றிருப்பதைத் தொடர்ந்து அவர் அவசரமாக இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

பொதுக் கட்டமைப்புக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்பட்டது ரெலோ என்கிற குற்றச்சாட்டு தொடர்ந்து நிலவி வருகின்றது. அது-வும் தவிர அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் வெளிப்படையாகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தத் தேர்தலில் ஆதரவு தெரிவித்திருந்தவர். அவர் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக பாசாங்கு காட்டினாலும் இதுவரையில் அவருக்கு விளக்கம் கேட்டு கடிதம் எதுவும் அனுப்பப்படவில்லை.

தன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமானால் ரெலோ தலைவர், செயலாளர், பேச்சாளர் ஆகியோருக்கு ரணில் விக்கிரமசிங்கவுடன் இருந்த 'டீல்' என்ன என்பதைத் தான் முழுமையாக வெளிப்படுத்துவேன் என்று வினோ மிரட்டி வரும் நிலையில் அவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகள் 'பார் லைசன்ஸ்' விவகாரம் உட்பட பல 'டீல்'களை வெளிச்சத்துக்கு கொண்டுவரும் என்கிற அச்சம் காரணமாக வினோவுக்கு எதிரான நடவடிக்கைகள் அடக்கி வாசிக்கப்படவே அதிக வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றன. வினோ மீதான நடவடிக்கை ரெலோவுக்குள்ளேயே ஏனைய உறுப்பினர்களைத் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழ வைக்கும் கொதிநிலையில் இருப்பதால் இப்போதைக்கு அதைச் சீண்ட செல்வம் தரப்பு தயாராக இருக்காது.

அப்படி ரெலோ வினோ மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பொதுக் கட்டமைப்புக்குள் ரெலோ இருப்பது குறித்த முரண்பாடுகள் எழும். ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வேட்பாளர்கள் எவரும் வேண்டாம் என்று புறமொதுக்கு அரியநேத்திரனை நிறுத்திய பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகப் பணியாற்றியவர்களை எப்படிப் பொதுக் கட்டமைப்புக்குள் வைத்திருக்க முடியும் என்ற கேள்வி பூதாகாரமாக எழும். ரோசநரம்புள்ள சில சிவில் சமூகத்தினராவது இந்தப்பிரச்சினையைபொதுக்கட்டமைப்புக்குள் கிளப்பத் தயாராகி வருகின்றார்கள். ஏற்கனவே இந்த விவகாரம் பொதுக்கட்டமைப்பிற்குள் கிளப்பப்பட்டும் இருக்கின்றது.

ஒற்றுமை என்ற பெயரில் பொதுக் கட்டமைப்பினர் ரணில் ஆதரவுத் தரப்பினரோடு சேர்த்து ரெலோவை அரவணைத்துக்கொள்வார்கள் என்றால், அந்தக் கட்டமைப்புக்குள்ளும் பிளவுகள் ஏற்படும். குறைந்தபட்சம் ரோசமுள்ள சில சிவில் சமூத்தினராவது அதைவிட்டு வெளியேறுவர்.

இந்தகைய பின்னணியில் செல்வம் அவசரப்பட்டு பொதுக் கட்டமைப்பில் தொடர்வோம் என்று அறிக்கைவிட்டது அவரது கட்சிக்குள்ளேயே சீற்றத்தை எழுப்பியுமுள்ளது. அரியநேத்திரன் போதிய வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் அதிலும் குறிப்பாகக் கிழக்கிலும் வன்னி மாவட்டங்களிலும் மிகக் குறைந்தளவு வாக்குகளையே பெற்றுள்ள நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் ரெலோவுக்குப் பாதகமான விளைவுகளைத் தரக்கூடிய இந்த முடிவை தனது நாடாளுமன்றக் கதிரையைப் பாதுகாப்பதற்காக மட்டுமே செல்வம் அவசரப்பட்டு எடுக்கின்றார் என்று அவர்கள் கருதுகின்றனர். எனவே பொதுக் கட்டமைப்புக்குள் தொடர்வதற்கு கட்சியின் உயர் அரசியல் பீட உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவதே செல்வத்துக்கு பெரும் சவாலாக அமையும்.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று வரக்கூடிய சூழலில் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் சம அளவுக்கு வேட்பாளர் தெரிவில் இடம்கொடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேட்பாளர் பட்டியலை அவர்களால் தயாரிக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

மறுபுறத்தில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்துவிட்ட நிலையில், தமிழ் அரசுக்கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை அரியநேத்திரன் மீது பாய்வதில் தீவிரமாக இருக்கின்றது. கட்சியால் விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அவர் பதிலளிக்காத நிலையில் அவர் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து தூக்கிவிசப்படுவார் என்றே தெரிகிறது.

இந்தத் தேர்தலில் அரியநேத்திரனுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் என்று 8 பேர் கறுப்பட்டியலில் போடப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவர் மீதும் உடனடியாக நடவடிக்கை பாயாதபோதும் அனைவருக்குமான எச்சரிக்கையாக அரியநேத்திரன் மீது இறுக்கமான நடவடிக்கை பாயும் என்றே தெரிகிறது. கட்சியின் அடுத்த மத்தியகுழுக் கூட்டத்தில் அனேகமாக அரியநேத்திரனின் கட்சி உறுப்புறுமை பறிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதேநேரத்தில் மற்றைய 7 பேருக்கும் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பப்படுவதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை தொடங்கப்படும் என்றே நினைக்கின்றேன்.

மாவையர் கடைசி நேரத்தில் நானும் கட்சி முடிவுப்படி சஜித்துக்குத்தான் முதல் வாக்கைப் போட்டேன் என்று இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு சரணடைந்தாலும், சஜித்துக்கு கட்சி ஆதரவு என்று தானே அறிக்கை எழுதிக்கொண்டு-போய் வவுனியாவில் வாசித்துவிட்டு வரும் வழியில் அரியநேத்திரனின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றி அவருக்குத்தான் நானும் வாக்களிப்பேன் என்று கூறிவிட்டு வந்தது தொடர்பில் அவரும் விளக்கமளிக்கவேண்டியவராக இருப்பார். அதற்கும் ஒரு 30 பக்க விளக்கக் கடிதத்தை அவர் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## புதிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இரண்டாவது விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டன. அதனடிப்படையில் அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெற்றார் என்று நேற்று முன்னிரவில் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க 56 லட்சத்து 34 ஆயிரத்து 915 (42.31%) வாக்குகளைப் பெற்றார்.

இரண்டாவது இடத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 43 லட்சத்து 63 ஆயிரத்து 35 (32.76%) வாக்குகளைப் பெற்று 2 ஆவது இடத்தில் இருந்தார்.

ஜனாதிபதியும் சுயேச்சை வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க 22 லட்சத்து 99 ஆயிரத்து 767 ( 17.27%) வாக்குகளைப் பெற்று 3 ஆம் இடத்தில் இருந்தார்.

வேட்பாளர்களில் எவரும் 50 சதவீதமான வாக்குகளைப் பெறாத நிலையில், விருப்பு வாக்கின் அடிப்படையில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நிலை ஏற்பட்டது.

இதையடுத்து 22 தேர்தல் மாவட்டங்களிலும் முதல் இரு வாக்காளர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளைத் தவிர்த்து எஞ்சியிருந்தவர்களின் வாக்குகளில் அநுர மற்றும் சஜித் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகள் கணக்கிடப்பட்டன. இதில் 1 லட்சத்து 70 ஆயிரத்து 867 வாக்குகளைப் பெற்று சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றாலும் ஒட்டுமொத்த வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் அநுரகுமார திஸநாயக்க இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியானார்.

இரண்டாம் விருப்பு வாக்கில் அநுரகுமார திஸநாயக்கவுக்கு 1 லட்சத்து 5 ஆயிரத்து 264 வாக்குகள் கிடைத்தன.

இறுதியில் 5,634,915 முதல் சுற்று வாக்குகளுடன் 105,183 விருப்பு வாக்குகளை சேர்த்து மொத்தமாக 57 லட்சத்து 40 ஆயிரத்து 98 (55.87%) வாக்குகளைப் பெற்று அநுரகுமார திஸாநாயக்க புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சஜித்பிரேமதாஸ 43 லட்சத்து 63 ஆயிரத்து 35 முதல் சுற்றுவாக்குகளுடன் 1 லட்சத்து 70 ஆயிரத்து 867 விருப்பு வாக்குகளை சேர்த்து மொத்தமாக 45 லட்சத்து 33 ஆயிரத்து 902 (44.13%) வாக்குகளைப் பெற்றார்.

விருப்பு வாக்குகளும் எண்ணப்பட்டு உத்தியோகபூர்வதேர்தல்முடிவுவெளியாவதற்கு நேற்று முன்னிரவு வரை சென்றுவிட்டதனால் அநுரகுமாரவின் பதவியேற்று இன்று வரைக்கும் பிற்போடப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் எளிமையான நிகழ்வில் இன்று காலை அநுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார்.

## வரலாற்றில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டேன்.

வரலாறு எனக்கு வழங்கிய அந்தப் பொறுப்பினை நான் சிறப்பாக நிறைவேற்றினேன்.

இரண்டு வருட குறுகிய காலப்பகுதியினுள் என்னால் இந்த நாட்டினை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது.

எனது அரசியல் வாழ்வில் எனது நாட்டுக்காக செய்யக் கிடைத்த பெறுமதியான கடமைப் பொறுப்பு அதுவாகும் என நான் நம்புகிறேன்.

நான் நாட்டைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் நூற்றுக்குஎழுபதுவீதமாககாணப்பட்ட பணவீக்கத்தினை பூச்சியம் தசம் ஐந்து (0.5%) வரை என்னால் குறைக்க முடிந்தது.

இருபது மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட இந்நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பினை ஐந்து தசம் ஏழு பில்லியன் அமெரிக்க டொலராக என்னால் அதிகரிக்க முடிந்தது.

அத்துடன் டொலருடன் ஒப்பிடுகையில் முன்னூற்று எண்பதாகக் காணப்பட்ட ரூபாயின் பெறுமதியை முன்னூறு ரூபாய் வரை குறைத்து, பலமான நிலையான பெறுமதிக்கு என்னால் அதனைக் கொண்டு வர முடிந்தது.

அத்துடன் மறை ஏழு தசம் மூன்றாக (-7.3சதவீதம்) காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியை நேர் இரண்டு தசம் மூன்று (2.3சதவீதம்) வரை அதிகரிப்பதற்கு நான் நடவடிக்கை மேற்கொண்டேன். அதுபற்றியும்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# அநுரகுமாரவின் பிரம்மிக்கத்தக்க வெற்றி நாட்டின் அரசியல் பரப்பை முழுவதுமாக மாற்றியிருக்கிறது

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு

அநுரகுமாரதிஸாநாயக்கவினதும், தேசிய மக்கள் சக்தியினதும் இந்த பிரம்மிக்கவைக்கும் வெற்றி நாட்டின் அரசியல் பரப்பை முழுமையாக மாற்றியமைத்திருக்கின்றது. இது நாட்டில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அவருக்கு வாக்களித்த மக்களுக்குக் கிடைத்த பரிசாகும் எனத் தெரிவித்திருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் தானே ஜனாதிபதி என்பதை அவர் உணர்ந்து செயற்படவேண்டியது அவசியம் என வலியுறுத்தியிருக்கின்றார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகள் எண்ணப்பட்டு, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இருந்த வேளையில், அதுகுறித்து தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு வலியுறுத்தியிருக்கிறார்.

அதில்அவர்மேலும்கூறியிருப்பவை வருமாறு -

ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவு இன்னமும் வெளியிடப் படாவிடினும், அநுரகுமார திஸாநாயக்கவே இலங்கையின் அடுத்த ஜனாதிபதி என்பது தற்போது வெளிப்படையாகியிருக்கின்றது. அநுரகுமார திஸாநாயக்கவினதும், தேசிய மக்கள் சக்தியினதும் இந்த பிரம்மிக்கவைக்கும் வெற்றி நாட்டின் அரசியல் பரப்பை முழுமையாக மாற்றியமைத்திருக்கின்றது.



அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிஎன்பது ஊழல்மோசடிகள், தன்னலம்கருதிய ஆதரவுபோன்றவற்றிலிருந்து தாமும், தமது பிள்ளைகளும் விடுபட்டு, பாதுகாப்பானதும் நேர்த்தியானதுமான வாழ்க்கையை வாழவேண்டும் எனும் எண்ணத்துடன் நாட்டில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அவருக்கு வாக்களித்த பல மில்லியன் மக்களுக்குக் கிடைத்த பரிசாகும்.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்று, அரசாங்கம் அமைத்து, பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுதேர்தலுக்குச் செல்லவேண்டியிருக்கும் நிலையில், எதிர்வரும் நாள்களில், வாரங்களில், மாதங்களில் அவர் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கும். இருப்பினும் இதுவரை காலமும் அவரது அரசியல் பயணத்திலும், தேர்தல் பிரசாரத்திலும் அவரிடமிருந்து வெளிப்பட்ட தெளிவும், ஜதார்த்தபூர்வ தன்மையும் அவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் காலப்பகுதியிலும் தொடரும் என எதிர்பார்க்கின்றேன்.

அதேவேளை அநுரகுமார திஸாநாயக்க நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் ஆபத்துக்களை உணர்ந்து செயற்படுவதுடன், அதன் பரந்துபட்ட அதிகாரங்களை மக்களின் நம்பிக்கையை உறுதிசெய்யும் வகையில் பயன்படுத்தவேண்டும். அதேபோன்று புதிய ஜனாதிபதி இந்நாட்டின் அரைவாசி வாக்காளர்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை என்பதையும், இருப்பினும் தான் அவர்கள் அனைவரினதும் ஜனாதிபதியே என்பதையும் புரிந்து செயலாற்றவேண்டும்.

மேலும் 5 வருடங்களுக்கு முன்னர் இதேபோன்று பிரம்மிக்கத்தக்க விதத்தில் தெரிவுசெய்யப்பட்டு, பின்னர் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யத் தவறியதன் விளைவாக பதவி விலகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விதியில் இருந்து அநுரகுமார திஸாநாயக்க அவசியமான பாடத்தைக் கற்றுக்கொண்டிருப்பார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். (05)

# பன்மைத்துவம் மற்றும் சமூகநீதியை உள்ளடக்கிய புதிய இலங்கையின் ஆரம்பம் அநுரவின் வெற்றி

## மனோகணேசன் நம்பிக்கை



அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும் என தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலின் முதலாவது வாக்குகள் எண்ணப்பட்டு வெளியான முடிவுகளின்பிரகாரம் தேசியமக்கள்சக்தியின்சார்பில் போட்டியிட்டஅநுரகுமாரதிஸாநாயக்கமுன்னிலையில் இருந்த வேளையில், அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கூறி தனது உத்தியோகபூர்வ'எக்ஸ்' தளப்பக்கத்தில்பதிவொன்றைச் செய்த மனோகணேசன், அப்பதிவில் மேலும்கூறியிருப்பவை வருமாறு -

'மக்களின் ஆணையைப்பெற்றுக்கொண்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். அதேபோன்று சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாம் கடுமையாகப் பணியாற்றிய மத்திய, மேல், சப்ரகமுவ, ஊடக மாகாணங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். ஜனநாயக செயன்முறை வெளிப்பட்டிருக்கிறது. அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த வெற்றி பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும்எனநம்புகிறேன்' எனத்தெரிவித்திருக்கிறார். (05)

# தென்மாகாண ஆளுநர் பதவியிலிருந்து விலகிய லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன.



தென் மாகாண ஆளுநர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதுவரை வெளியாகியுள்ள பெறுபேறுகளின்படிஜனாதிபதிதேர்தலில் போட்டியிட்ட மற்றுமொரு வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதையடுத்து தான் தென் மாகாண ஆளுநர் பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் மூலம் லக்ஷமன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்து பதவியை வழங்கியமைக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த லக்ஷமன் யாப்பா அபேவர்தன கடந்த மே மாதம் ஜனாதிபதியால் தென் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# வீணாகிய விருப்பு வாக்குகள் மட்டுமே ஒன்றரை லட்சம்

## விருப்பு வாக்குகள் குறித்து தெளிவின்மை: நீக்கப்பட்ட ஒன்றரை லட்சம் வாக்குகள்



தேர்தல் முடிவுகள் வெளியாகி கொண்டிருக்கும் நிலையில், இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஒன்றரை லட்சம் வாக்குகள் நிராரிக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இம்முறை தேர்தலில் வரலாற்றில் அதிகூடிய வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதன் காரணமாக எந்தவொரு வேட்பாளரும் 50 வீதம் வாக்குகளைப் பெற முடியாது என்றொரு வாதம் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதன் காரணமாக இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்கள்வழங்கப்பட்டிருந்தன.எனினும் அவ்வாறு இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகளை அளிப்பதற்கான சரியான முறை குறித்த தெளிவு உரிய முறையில் வழங்கப்படாத காரணத்தால் அவ்வாறு இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் பெருமளவில் நிராகரிக்கப்பட்டுள்ளன.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அநுர முன்னுள்ள சவால்கள்

2024 அரசுத் தலைவர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசநாயக்கவே வெற்றி பெற்றார் என்று உறுதியாக அறிவிக்கப்பட்டுவிட்டது. முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை என்றாலும் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணிக்கையின் பின்னர் 55.87 சதவீத வாக்குகளைப் பெற்ற அநுரகுமார திசநாயக்க வெற்றியாளராக தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டார்.

இன்று அவர் அரச தலைவர் செயலகத்தில் எளிமையான நிகழ்வு ஒன்றில் இலங்கையின் 9ஆவது அரசுத் தலைவராகப் பதவியேற்கவுள்ளார். அவர் முன்னாள் பெரும் சவால்கள் உள்ள நிலையில் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் மாற்றத்துக்கான விருப்பமாக அவர் அரசுத் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கை கடந்த 76 வருடங்களாகக் கடந்து வந்த பாதையில் இருந்து தேசிய மக்கள் சக்தி தம்மை புதிய, சிறப்பான, மேம்பாடு நோக்கிய எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் என்கிற எதிர்பார்ப்போடு இலங்கையின் பெரும்பாலான மக்கள் அநுரவுக்கு வாகக்களித்துள்ளனர் என்பதை மறுக்கமுடியாது.

அந்த மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்கு பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்துவது மிக மிக அவசியம். அநுரவின் வெற்றி என்பது இலங்கையில் மார்க்ஸியத்தின் வெற்றி என்பதாக மேற்கு ஊடகங்கள் மற்றும் இந்திய ஊடகங்களால் கருதப்படும் நிலையில், முதலாளித்துவ நாடுகளின் கூர்மையான கண்காணிப்புக்குக் கீழேயே அநுர ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கவேண்டியவராக இருக்கின்றார். மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளுடனான உறவுகளில் சமநிலையைக் கையாளாமல் பொருளாதார மறுமலர்ச்சியை அநுரவால் சாத்தியமாக்க முடியாது.

அதேபோன்று பொருளாதார மறுமலர்ச்சிக்கான முக்கியமான முதன்மையான தடைக் கற்களில் ஒன்றாக இனப்பிரச்சினையும் துருத்தி நிற்கின்றது என்பதையும் அநுர புறமொதுக்க முடியாது. பன்னாட்டு உறவில் அநுரவின் சமநிலை தளம்பினால், அதாவது மேற்குக்கும் கிழக்குக்குமான உறவில் அநுர தளம்பலடைந்தால் மேற்குநாடுகள் இனப்பிரச்சினையை உலக விவகாரமாக்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நெருக்கடியை அதிகரித்து அநுரவின் ஆட்சியை ஆட்டம்காண வைப்பதற்குத் தயங்கமாட்டா. எனவே இனப்பிரச்சினைக்கு முடிந்த விரைவில் தீர்வைக் காண்பது அநுரவுக்கு முன்னாள் உள்ள சவால்.

தேசிய மக்கள் சக்தியாக அநுர இன்று எழுச்சி பெற்றிருந்தாலும் அவரதும் தேசிய மக்கள் சக்தியினதும் அடிப்படை ஜேவிபிதான் என்பதும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அந்தக் கட்சி கடும்போக்குவாதத்தையே கடந்த காலங்களில் தீவிரமாக முன்னெடுத்து வந்தது என்பதும் இனவாதம் அதன் அடிநாதங்களில் ஒன்றாக இருந்தது என்பதையும் மறந்துவிடமுடியாது. புறமொதுக்கவும் முடியாது. 2010க்குப் பிற்பட்ட காலத்தில் ஜேவிபியின் இந்தப் போக்கு மாற்றம் பெற்றது என்றாலும், அதன் அடிப்படைவாத உறுப்பினர்கள் இன்னமும் கட்சிக்குள் எஞ்சியிருக்கிறார்கள் என்பதையும் மறக்கமுடியாது. எனவே இவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு தமிழ், முஸ்லிம் இனங்களும் தீவிரமான எச்சரிக்கையுடனேயே அநுரவின் ஆட்சியை அணுகும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. இந்த முரண் நிலை வளர்வது வெளிச் சக்திகள் ஆட்சியில் செல்வாக்குச் செலுத்துவதை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும்.

இவற்றையெல்லாம் கடப்பதற்கும் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்கி இலங்கையின் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கும் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வைக் காண முற்படுவது அநுரவின் முன்னுள்ள பெரும் சவால். இதற்கு முந்தைய அரசுத் தலைவர்களைப் போன்று காலத்தைக் கடத்துவதன் மூலம் இனப்பிரச்சினையிலிருந்து தப்பிச்செல்ல முயலாமல் உருப்படியாக எதையாவது செய்யவேண்டும். அதற்கு முதலில் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டை அவர் தனது கைகளில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

# தேசிய நெருக்கடியின் போது ஜனாதிபதியுடன் இருந்தமையை பெருமையாகக் கருதுகின்றோம்

### ரணில் ஆதரவு தரப்பு




தேசிய நெருக்கடியின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றியமையைப் பெருமையாகக் கருதுவதாகவும், தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிர்காலத்தை சிறந்த முறையில் கொண்டு செல்ல வாழ்த்துவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த முக்கிய தரப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய மனுஷ நாணயக்கார தனது எக்ஸ் தள பதிவில், தேசிய நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்கவின் குழுவில் இருந்ததில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. மக்கள் கொடுத்த அதிகாரத்தை அவரின் வழிகாட்டுதலின் கீழ் பயன்படுத்தினேன். எந்தவிடயமாக இருந்தாலும், நாங்கள் தொடங்கியதை முடிக்க உறுதிபூண்டுள்ளோம். ரணிலுக்கு எனது வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தனது பதிவில், இலங்கையின் 9 ஆவது நிறைவேற்றனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமைக்காக அனுரகுமாரதிஸாநாயக்கவை பாராட்டுகிறேன். இலங்கை மக்கள் பேசுகின்றனர். மற்றும் ஜனநாயகம் வென்றுள்ளது. நமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு வருங்கால ஜனாதிபதிக்கு பலமும், விவேகமும், தைரியமும் கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன். சப்ரகமுவ மாகாண ஆளுநர் பதவியை நான் விரைவில் ராஜினாமா செய்வேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.-

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தனது பதிவில், அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். இலங்கை அரசியல் வரலாற்றில் இல்லாத ஒரு சமூக புரட்சியை அநுர உருவாக்கியுள்ளார். அவருடைய கொள்கைகளுடன் நாம் முரண்பட்டவர்களாக இருக்கிறோம், அவர் நாட்டுக்காக ஒரு சிறந்த சேவையைச் செய்வார் என்று நம்புவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(05)

# தமிழர்களின் ஒற்றுமையை பறைசாற்றி இருக்கிறதாம் அரியநேத்திரனின் வெற்றி

### செல்வம் அடைக்கலநாதன் இப்படிக் கூறுகிறார்



அரியநேத்திரனின் பெற்ற வாக்குகள் தமிழர்களின் ஒற்றுமையை பறைசாற்றும் வெற்றி என்பதோடு நாடாளுமன்ற தேர்தலிலும் பொது கட்டமைப்பினூடாக களமிறங்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் திரட்சியையும் ஓர் அணியில் தமிழ் மக்கள் திரள வேண்டும் என்கின்ற ஒரு நற்செய்தியையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு பலப்பரீட்சை எமது தேசத்தில் இடம்பெற்றது.

இதற்கு தமிழ் மக்கள் தங்களது ஆதரவை தெரிவித்திருக்கின்றார்கள். அவருக்கு கிடைத்த ஒரு லட்சத்து 80 ஆயிரம் வாக்குகள் என்பது ஒரு வெற்றியின் முதற்படியாகவே கருதுகிறோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்த பொதுக் கட்டமைப்பின் ஊடாகவே நாம் தேர்தலை சந்திப்போம். இது மக்களின் ஒரு திரட்சியான வெளிப்பாடாக இருக்கும் என்பதோடு ஒற்றுமையை விரும்பாத கட்சிகளை மக்கள் புறக்கணிப்பார்கள் என்பதையும் நாடாளுமன்றத் தேர்தல் வெளிப்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

*(05)*

# அநுரவுடன் கைகோர்க்க மலையகத்தினது பிரதானகட்சி கொழும்பில் முகாமிட்டு பேச்சு!




(க.கிஷாந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அக்கட்சி முக்கியஸ்தர்களுடன் மலையகத்திலுள்ள பிரதான கட்சியின் பிரமுகர்கள் பேச்சு நடத்திவருகின்றனர்.

கொழும்பில் முகாமிட்டுள்ள மேற்படி கட்சி உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியினருடன் நேரடி பேச்சில் ஈடுபட்டு, அடுத்தக்கட்ட நகர்வுகள் தொடர்பில் ஆராய்ந்துவருகின்றனர் என தெரியவருகின்றது.

எதிர்காலத்தில் அமையவுள்ள இடைக்கால அரசு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன எனவும், மலையகத்துக்கான வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன எனவும் அறியமுடிகின்றது.(05)



# அமெரிக்க தூதரகமும் இன்று மூடப்படுமாம்

இன்று 23ஆம் திகதி (திங்கட்கிழமை) விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(05)

# சிறைக்கைதிகள் மறுவாழ்வுக்கான திறன் விருத்தி பயிற்ச்சி ஆரம்பம்



இம்மாதம் 17 ஆம் திகதி நடைபற்ற நிகழ்வு சிறைச்சாலையில் குற்றங்களுக்கான தண்டனைகளை அனுபவித்துவரும் கைதிகளுக்கு அவர்களுடைய எதிர்கால வாழ்கைக்கான வழிகாட்டலுக்கான வாய்ப்பு கிடைத்த நாள். ஆம் யாழ்பாண சிறைச்சாலை கைதிகளுக்கானதிறன் விருத்தி பயிற்ச்சிக்கான வாய்பு சிறைச்சாலை அத்தியட்சகரின் ஆதரவுடன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் லண்டன் ரட்ணம் பபுன்டேசன் ஆகிய நிறுவனங்களின் நிதி ஆதரவுடன் தேசிய தொழிற்பயிற்சி நிறுவன வளவாளர்களின் பங்களிப்போடு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வை ரட்ணம் பவுண்டேசன் ஸ்தாபகர் வைத்தியர் நித்தியானந்தனும் அவர்தம் பாரியார் திருமதி சரோஜினி நித்தியானந்தம் அம்மையார் மற்றும் ஐஎம்எச்ஓ நிறுவன இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன் அவர்களும் ஆரம்பித்து வைத்தனர்.

மேலும் முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமாரும் திட்ட இணைப்பாளர் துஷாந்தனும் பங்குபற்றி சிறப்பித்தனர்,




செயற்றிட்ட தொகுதியை, பெயர்பலகையை திரைநீக்கி ஆரம்பித்து வைத்த வைத்தியர் நித்தியானந்தன் இது கைதிகளும் மனிதர்கள் என்றவகையில் அவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம் இது எனவும் இதற்கு முழுமையாக உதவியாக செயற்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமாரும் அவரது சக உதவியாளர்களும் போற்றத்தக்கவர்கள் எனக்குறிப்பிட்டார். தொடர்ந்து கைதிகளின் செயற்றிறன் காட்சிக்கூடமும் விற்பனை கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

இப்பயிற்ச்சி ஆண்கைதிகளுக்கானது பயிற்ச்சியின் நிறைவில் சான்றிதழும் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பெண்கைதிகளுக்கான இத்தகைய பயிற்ச்சி ஐஎம்எச்ஓ தலைவி வைத்தியர் இராஜம் தெய்வேந்திரனால் கடந்த ஏப்பிரல் மாதமளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர்களது திறன்விருத்தியின் ஆக்கங்களும் விருந்தினர்களால் அவதானிக்கப்பட்டு பாராட்டப்பட்டது.(05)



# முதல் சுற்று வாக்கு எண்ணிக்கைப்படி 2024 ஜனாதிபதி தேர்தல் மாவட்ட முடிவு



**1.கொழும்பு மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 629,963
சஜித் பிரேமதாஸ - 342,108
ரணில் விக்கிரமசிங்க - 281,436
நாமல் ராஜபக்ஷ - 30,432

**2.கம்பஹா மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 809,410
சஜித் பிரேமதாஸ - 349,550
ரணில் விக்கிரமசிங்க - 216,028
நாமல் ராஜபக்ச - 41,193

**3.களுத்துறை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 387,764
சஜித் பிரேமதாஸ - 236,307
ரணில் விக்கிரமசிங்க - 143,285
நாமல் ராஜபக்ச - 22,727

**4.யாழ்ப்பாணம் மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 121,177
அரியநேத்திரன் - 116,688
ரணில் விக்கிரமசிங்க - 84,558
அநுரகுமார திஸாநாயக்க - 27,086
கே.கே.பியதாஸ - 6,074

**5.வன்னி மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 95,422
ரணில் விக்கிரமசிங்க - 52,573
பா.அரியநேத்திரன் - 36,377
அநுரகுமார திஸாநாயக்க - 21,412

**6.திருகோணமலை மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 120,588
அநுரகுமார திஸாநாயக்க - 49,886
ரணில் விக்கிரமசிங்க - 40,496
அரியநேத்திரன் - 18,524
நாமல் ராஜபக்ச - 2,183

**7.மட்டக்களப்பு மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 112,598
ரணில் விக்கிரமசிங்க - 72,287
அநுரகுமார திஸாநாயக்க - 34,151
அரியநேத்திரன் - 24,549

**8.திகாமடுல்ல மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 200,384
அநுரகுமார திஸாநாயக்க - 108,971
ரணில் விக்கிரமசிங்க - 86,589
அரியநேத்திரன் - 9,985
நாமல் ராஜபக்ச - 7,570

**9.கண்டி மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 394,534
சஜித் பிரேமதாஸ - 323,998
ரணில் விக்கிரமசிங்க -162,707
நாமல் ராஜபக்ச - 19,403

**10.நுவரெலியா மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 201,814
ரணில் விக்கிரமசிங்க - 138,619
அநுரகுமார திஸாநாயக்க - 105,057
நாமல் ராஜபக்ச - 8,821

**11.மாத்தளை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 140,544
சஜித் பிரேமதாஸ - 121,803
ரணில் விக்கிரமசிங்க - 53,829
நாமல் ராஜபக்ச - 10,327

**12.பதுளை மாவட்டம்**
சஜித் பிரேமதாஸ - 219,674
அநுரகுமார திஸாநாயக்க - 197,283
ரணில் விக்கிரமசிங்க - 115,138
நாமல் ராஜபக்ச - 13,869

**13.மொனராகலை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 140,269
சஜித் பிரேமதாஸ - 134,238
ரணில் விக்கிரமசிங்க - 35,728
நாமல் ராஜபக்ச - 12,832

**14.இரத்தினபுரி மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 291,708
சஜித் பிரேமதாஸ - 257,721
ரணில் விக்கிரமசிங்க - 145,038
நாமல் ராஜபக்ச - 20,575

**15.கேகாலை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 247,179
சஜித் பிரேமதாஸ - 185,930
ரணில் விக்கிரமசிங்க - 106,510
நாமல் ராஜபக்ச - 11,722

**16.அநுராதபுரம் மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 285,944
சஜித் பிரேமதாஸ - 202,289
ரணில் விக்கிரமசிங்க - 82,152
நாமல் ராஜபக்ச - 15,029

**17.பொலனறுவை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 130,880
சஜித் பிரேமதாஸ - 100,730
ரணில் விக்கிரமசிங்க - 36,908
நாமல் ராஜபக்ச 5,594

**18.குருநாகல் மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 544,763
சஜித் பிரேமதாஸ - 368,290
ரணில் விக்கிரமசிங்க - 146,520
நாமல் ராஜபக்ச - 38,730

**19.புத்தளம் மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 207,134
சஜித் பிரேமதாஸ - 173,382
ரணில் விக்கிரமசிங்க - 60,719
நாமல் ராஜபக்ச - 13,285

**20.காலி மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 366,721
சஜித் பிரேமதாஸ - 189,555
ரணில் விக்கிரமசிங்க - 107,336
நாமல் ராஜபக்ச - 24,382

**21.மாத்தறை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 287,662
சஜித் பிரேமதாஸ - 147,462
ரணில் விக்கிரமசிங்க - 79,249
நாமல் ராஜபக்ச - 14,962

**22.அம்பாந்தோட்டை மாவட்டம்**
அநுரகுமார திஸாநாயக்க - 221,913
சஜித் பிரேமதாஸ - 131,503
ரணில் விக்கிரமசிங்க - 33,217
நாமல் ராஜபக்ச - 26,707

# விருப்பு வாக்கு எண்ணிக்கைகள்

2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் முதல் சுற்றில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாத காரணத்தால் வெற்றிபெற்றவரைத் தீர்மானிப்பதற்காக அநுரகுமார மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டன. தேர்தல் ஆணைக்குழுவால் நேற்றிரவு அறிவிக்கப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை வருமாறு.

**01. கொழும்பு**
சஜித் பிரேமதாஸ : 35,488
அநுரகுமார திஸாநாயக்க : 17,902

**02. நுவரெலியா**
சஜித் பிரேமதாஸ : 5,440
அநுரகுமார திஸாநாயக்க : 3,162

**03. திகாமடுல்ல**
சஜித் பிரேமதாஸ : 4,814
அநுரகுமார திஸாநாயக்க : 3,391

**04. மட்டக்களப்பு**
சஜித் பிரேமதாஸ : 7,191
அநுரகுமார திஸாநாயக்க : 4,467

**05. பதுளை**
சஜித் பிரேமதாஸ : 4,760
அநுரகுமார திஸாநாயக்க : 3,437

**06. யாழ்ப்பாணம்**
சஜித் பிரேமதாச : 21,511
அநுரகுமார திஸாநாயக்க : 8,174

**07. திருகோணமலை**
சஜித் பிரேமதாஸ - 4,119
அநுரகுமார திஸாநாயக்க - 1,930

**08. வன்னி**
சஜித் பிரேமதாஸ : 6,162
அநுரகுமார திஸாநாயக்க : 2,390

**09. அநுராதபுரம்**
சஜித் பிரேமதாச : 3,537
அநுரகுமார திஸாநாயக்க : 2,773

**10.புத்தளம்**
சஜித் பிரேமதாஸ : 3,103
அநுரகுமார திஸாநாயக்க : 2,149

**11. காலி**
சஜித் பிரேமதாஸ : 5,828
அநுரகுமார திஸாநாயக்க : 4,714

**12.கேகாலை**
சஜித் பிரேமதாஸ : 4,314
அநுரகுமார திஸாநாயக்க : 3,869

**13. மொனராகலை**
சஜித் பிரேமதாஸ : 1,820
அநுரகுமார திஸாநாயக்க : 1,395

**14. மாத்தறை**
சஜித் பிரேமதாஸ : 4,505
அநுரகுமார திஸாநாயக்க : 3,130

**15. இரத்தினபுரி**
சஜித் பிரேமதாஸ : 6,022
அநுரகுமார திஸாநாயக்க : 4,888

**16. குருநாகல்**
சஜித் பிரேமதாஸ : 7,920
அநுரகுமார திஸாநாயக்க : 6,408

**17.கண்டி**
சஜித் பிரேமதாஸ : 9,188
அநுரகுமார திஸாநாயக்க : 8,020

**18. மாத்தளை**
சஜித் பிரேமதாஸ: 2,211
அநுரகுமார திஸாநாயக்க : 1,909

**19. களுத்துறை**
சஜித் பிரேமதாஸ - 8,517
அநுரகுமார திஸாநாயக்க - 6,135

**20.கம்பஹா**
சஜித் பிரேமதாஸ - 16,683
அநுரகுமார திஸாநாயக்க - 12,217

**21. ஹம்பாந்தோட்டை**
சஜித் பிரேமதாஸ : 3,093
அநுரகுமார திஸாநாயக்க : 1,763

**22. பொலனறுவை:**
சஜித் பிரேமதாஸ - 1,641
அநுரகுமார திஸாநாயக்க - 1,041




காலைக்கதிர் Kalaikkathir

## வரலாற்றில்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

எனது அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க அரசியல் கடமைப் பொறுப்பு பற்றியும் இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினர் உரிய மதிப்பீடொன்றை வழங்குவார்கள் என நம்புகிறேன்.

இந்த நாட்டின் ஆட்சியாளர் என்ற வகையில் வரலாற்றில் எனக்கு உரித்தான இடம் இன்று அல்லாமல் எதிர்காலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதை நான் அறிவேன்.

நான்சரியானபாதையில்சென்றுமக்களின் துயரங்களை முடிந்தளவு நீக்கினேன். புதிய ஜனாதிபதியும் அவருக்குக் கிடைத்த மக்கள் ஆணையின்பிரகாரம்சரியானபாதையினைத் தெரிவு செய்து மக்களின் துயரங்களை நீக்குவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

மிகவும் சவால் மிகுந்த தொங்குபாலத்தில் இலங்கைஎனும்பாசம்மிகுந்தகுழந்தையினை நான்முடிந்தளவுஅதிகபட்சதூரம்பாதுகாப்பாகக் கொண்டு வந்தேன்.

தொங்குபாலத்தின்முடிவிடம்கண்களுக்கு மிகவும் எட்டும் தூரத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த பாசம் மிகுந்த குழந்தையினை அநுர குமார திஸாநாயக்க அவர்களிடம் ஒப்படைப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அநுர ஜனாதிபதி அவர்களே, நீங்களும் நானும் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை நான் மிகவும் கருணையுடன் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்தக் குழந்தையை நான் கொண்டு வந்தததை விடவும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் முடிவிடத்திற்கு கொண்டு செல்லும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அதிகாரம்இருந்தாலும்இல்லாவிட்டாலும், பதவிகளை வகித்தாலும் வகிக்காவிட்டாலும் இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை ஏற்புடைய சந்தர்ப்பங்களில் எந்தவிதமான தயக்கமும் இன்றி நான் நிறைவேற்றுவேன்.

அத்துடன், எனது ஆட்சிக் காலத்தினுள் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய, வழங்காத அனைவருக்கும், இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அநுரவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதுநிலைகள்தங்களின்ஆட்சிக்காலத்திலேனும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத்தமிழர்களிடையே நிறைந்திருக்கிறது.

விசேடமாக, இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டஒருஇனத்தின்வலியுணர்ந்த சக பிரஜையாகவும், எமது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய அரச தலைவராகவும் செயலாற்றும் வகையில் தங்கள் தலைமையிலான ஆட்சிபீடம் கட்டமைக்கப்படுமாயின், அதுவே இந்த நாட்டின் சுபீட்சத்துக்கான அடித்தளமாக அமையும்.

நாட்டின் அரசியல், பொருளாதார தளம்பல் நிலைகளை சமன் செய்வதிலுள்ள சவால்களை எதிர்கொண்டு செயலாற்றத் தயாராவதைப் போன்று, ஈழத்தமிழர்களின் அரசியல்அபிலாஷைகளைஉணர்ந்தமக்கள் தலைவராக, இனவாதமற்றஇலங்கைத்தீவை உருவாக்கும் அரசியல் கூருணர்வு மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், ஈழத்தமிழர்களின் அடிப்படை உரித்துகளை உறுதிசெய்யும் வகையில் தங்களின் ஆட்சி மலரும் என்ற எதிர்பார்ப்போடு, தங்களின் வெற்றிக்கான வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறேன் என்றார்

## விருப்பு வாக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, தேவை ஏற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித் துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது, சில வாக்கு எண்ணும் மையங்களில் தமது கட்சியின் முகவர்கள்இன்றிஇரண்டாவதுஎண்ணிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

“எங்கள் கட்சி முகவர்கள் முன்னிலையில் இரண்டாவதுஎண்ணிக்கைநடக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டோம். எனினும்,வாக்குஎண்ணும்மையங்களுக்குள் எங்கள் முகவர்கள் அனுமதிக்கப்படவில்லை,” என்றார்.

## 15 தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு மற்றும் மலையக மாவட்டங்களில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றார் நுவரெலியா, பதுளை, திகாமடுல்ல, மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் அவருக்கு வெற்றி கிடைத்தது.

பிரேமதாச 2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மாவட்டங்கள் அனைத்திலும் வெற்றிபெற்றதுடன் இம்முறை மேலதிகமாகப் பதுளைமாவட்டத்திலும்வெற்றிபெற்றிருக்கிறார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 2019 வெற்றிபெற்ற 16 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் அநுரகுமாரதிஸநாயக்கவெற்றிபெற்றுள்ளார்.

திஸாநாயக்க -முதலாவது சுற்று முடிவில் 5,634,915 வாக்குகளைப் (42.31%) பெற்று அதிக வாக்குகளைப் பெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துக்களை தெரிவிப்பதாக இலங்கைக் கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித் துள்ளார்.

தங்கள் ஜனநாயக உரிமைகளை அமைதியான முறையில் பயன்படுத்தியமைக் காக இலங்கை மக்களை பாராட்டுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். பகிரப்பட்ட முன்னுரிமைகளின்அடிப்படையில்இணைந்து செயற்பட தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

## தேவைப்படும்போது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

‘தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைத் முன்னேற்றுவதற்கு ஆதரவை வழங்குவது அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களின் கடமையாகும்‘ என்று தேர்தல் வெற்றி அறிவிப்பின் பின்னர் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

''2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய அனுரகுமார திசநாயக்கவை நான் வாழ்த்துகிறேன். தேசத்தை உறுதிப்படுத்துவதற்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் அவருக்கு பலம் இருப்பதாக நான் நம்புகிறேன்,‘ என்று அவர் மேலும் கூறினார்.

## அனுரகுமார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகபதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது -

நீண்ட மற்றும் கடினமான தேர்தல் பிரசாரத்தின் பின்னர் தேர்தல் முடிவுகள் தற்போது தெளிவாக உள்ளன.

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவிற்காக தீவிரமாக பிரசாரம் செய்தாலும், மக்கள் தங்கள் முடிவை எடுத்துள்ளனர்.

நான்அனுரகுமாரதிசநாயக்கவிற்குமக்கள் வழங்கியுள்ள ஆணையை முழுமையாக மதிக்கின்றேன்.

ஜனநாயகத்தில்மக்களின்விருப்பைமதிப்பது முக்கியமானது நான் அதனை செய்கின்றேன். நான் அனுரகுமாரதிசநாயக்கவிற்கும் அவரது குழுவினருக்கும் எனது நேர்மையான வாழ்த்துக்களைதெரிவித்துக்கொள்கின்றேன்.

நாட்டிற்கு தலைமை தாங்குவது சாதாரண விடயமில்லை, இலங்கைக்கு மிகவும் அவசியமாக உள்ள அமைதி வளம் ஸ்திரதன்மை ஆகியவற்றை அவர்களின் தலைமைத்துவம் கொண்டுவரும் என நான் நேர்மையாக எதிர்பார்க்கின்றேன்.

அவர்கள் எதிர்கொள்ளும் சவாலகள் மிகவும்கடினமானவை, கடந்தகாலத்தின் படிப்பினைகள், தங்களிற்கு முன்னர் ஆட்சியிலிருந்தவர்களின்வெற்றிதோல்விகளை அவர்கள் ஆராய்வார்கள் கற்றுக்கொள்வார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

உண்மையானவெற்றிதேர்தலில்வெல்வது மாத்திரமில்லை மாறாக புத்திசாலித்தனமாக ஆட்சி செய்வது, மக்களின் தேவைகளிற்கு உண்மையாகயிருப்பது என்பதை வரலாறு எங்களிற்கு கற்பித்துள்ளது.

கடந்தகாலங்களில் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தங்களின் வாக்குறுதிகளை கண்டுகொள்ளாமல்,உண்மையான மாற் றத்தை கொண்டுவருவதற்கான வாய்ப்பை தவறவிட்டனர்.

திசநாயக்கவும் அவரது குழுவினரும் இந்த தவறிலிருந்து பாடம் கற்கவேண்டும். - என்றுள்ளது.(05)




காலைக்கதிர்
Kalaikkathir

## தீர்க்கப்படாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடவுறுதியை வெளிப்படுத்தியுள்ள நிலையில், புதியஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கமற்றும் அவரது சகாக்கள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு,தேசப்பற்றுடன் ஜனநாயகத்தின் உண்மையான உணர்வோடு இந்த வெற்றியை நாங்கள் நிலைநிறுத்துவோமாக.

நமது தேசத்தின் இதுகாறும் தீர்க்கப்படாத முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒளி இப்போது புதிய அணியினர் ஊடாகப் பாய்ச்சப்படுகின்றது. நாட்டின் அரசியலில் ஒரு புதிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம், பல சவால்களை எதிர்கொள்வதற்கான திராணியைவளர்த்துக்கொண்டுமுன்னோக்கிச் செல்ல வேண்டிய இச்சந்தர்ப்பத்தில், பிராந்தியத்துடனும், சர்வதேசத்துடனும் சமாதானத்திற்காக ஒத்துழைக்கும் தோழமையைஅனைத்துஇலங்கையர்களும் வரிந்து கொள்வோமாக.

இதே வேளையில்,நாம் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் கௌரவ சஜித் பிரேமதாசவுக்கும் மனப்பூர்வமான பாராட்டுக்களைத்தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் எங்கள் மீது நம்பிக்கை வைத்து, தங்களுடைய காலத்தையும் நேரத்தை அர்ப்பணித்து,பெறுமதியானவாக்குரிமையைப் பயன்படுத்திய சகல சமூகங்களையும் சேர்ந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக - என்றார்.

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாசவே வெற்றிபெற்ற நிலையில், அவருக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

''இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கைஏற்றுவடக்குகிழக்குமாவட்டங்கள் அனைத்திலும் சஜித் முதலிடத்தைப் பெறும் வண்ணம் வாக்களித்த எமது மக்களுக்கு நன்றிகள்.

கட்சி எடுத்த தீர்மானம் சரியானது என்பதை மக்கள் தமது வாக்கின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். புதிய ஜனாதிபதி அநுர எடுக்கின்ற நடவடிக்கைகள் அனைத்துக்கும் எமது கட்சி முழு ஆதரவை வழங்கும் அதேவேளை, தொடர்ச்சியாக எமது மக்களின் விடிவிற்கான அனைத்து அழுத்தங்களையும் நாங்கள் தொடர்ந்து கொடுப்போம்'' என்று காலைக்கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தார் சுமந்திரன்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விசப் பரீட்சைபடுதோல்விஅடைந்ததைத்தொடர்ந்து, அதை முன்னிறுத்தியோர் இனிவரும் நாள்களில் அத்தகைய முயற்சியை தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் கைகூடுவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்தியத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களது செழுமைக்காக உறவுகளை மேலும் வலுவாக்க உறுதிபூண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# மன்னாரில் முழுமையான ஊரடங்கு பொலிஸால் எச்சரிக்கப்பட்ட மக்கள்

நாடளாவிய ரீதியில் தேர்தலுக்குப் பின்னரான பாதுகாப்புக்கென பொலிஸால் ஊரடங்கு சட்டம் அமல் படுத்தப்பட்ட நிலையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் வரை குறித்த ஊரடங்கு சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலும் முழுமையாக ஊரடங்கு சட்டம் நடைமுறைப டுத்தப்பட்டுள்ளதுடன் உரிய அனுமதியின்றி நடமாடும் பொது மக்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

வியாபாரநிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் பொது போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை மேலதிக பாதுகாப்பு நடவடிக் கைகளுக்காக இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# கல்முனை மாநகரம் வெறிச்சோடியது






(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாட்டில் சனிக்கிழமை இரவு முதல் நேற்று நண்பகல் 12 மணி வரை அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு சட்டத்திற்கு பொதுமக்கள் ஒத்துழைப் புக்களை வழங்கியுள் ளனர்.

இந்நிலையில் கல்முனை மாநகர பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது கல்முனை, பாண்டிருப்பு,மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை உள்ளிட்ட பல பகுதிகளில் வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

மேற்படி பகுதிகளில் சனநடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டதுடன் தொடர்ந்தும் பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். (05)

# வாழைச்சேனையில் ஊரடங்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு










(எச்.எம்.எம்.பர்ஸான்)

நாட்டில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை அமுல் படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டத்திற்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.

இந்நிலையில், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச் சேனை, ஓட்டமாவடி, மீராவோடை உள்ளிட்ட பல பகுதிகளில் வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

குறித்த பகுதிகளில் சனநட மாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டதுடன், தொடர்ந்தும் பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2024இல் வெளியிடப்பெற்றது